



ஓலை 87 | ஓசை 210 | செப்டம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அறனழீஇ யல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை

## பொருள்

ஒருவன் முகத்திற்கு எதிரே முகதாட்சணியம் இல்லாமல் பேசினாலும், அவன் எதிரில் இல்லாமல் இருக்கும்போது பின்விளைவை எண்ணாமல் அவனைப் பற்றிப் பேச வேண்டா.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

மரபு பா கற்போம்

# ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்!

## பன்னிரு சீர் கழிநெடிலடி மண்டிலம்




கார்முகில் முதிர்ந்தால் மழையுமே முதிர்ந்து
கனிந்தே பொழிந்திடுமே;
கரையுமே புரண்டு வெள்ளமு மோடி
கழனி விளைந்திடுமே!

சீர்மிகு அருவி மலையிலே முதிர்ந்தே
சீராய்க் குதித்திடுமே;
சிந்தையும் குளிர்ந்தே ஆறென ஒடி
செழுமை முதிர்ந்திடுமே!

நேர்மிகு பார்வை முதிர்ந்திட சேர்த்தே
நேய முடனெவர்க்கும்,
நேர்த்தியாய் வழங்காப் பொருள்களும் தீயார்
நேர்த்தி யாய்க்கொள்வர்,

சேர்த்திடும் செல்வம் ஏழையர் பெறவே
செலவும் செய்திடாரின்
செல்வமும் தீயார் கொள்வரே; உணர்ந்தே
செய்வீர் கொடையாக!




இலக்கணக் குறிப்பு: பன்னிரு சீர் கழிநெடிலடி மண்டிலம்
மேலேயுள்ள பாடல் பன்னிரு சீர்கள் கொண்ட கழிநெடிலடி மண்டிலம் ஆகும். இதை இரட்டை மண்டிலம் என்பர் இப்பாடலை ஒரு வரி நான்கு சீர்கள், அடுத்த வரி உள்ளே தள்ளி மடித்து இரண்டு சீர்கள் ஒரு வரியாகவும் அல்லது மூன்று, மூன்று சீர்கள் ஒவ்வொரு வரியிலும், வரும்படி எழுதலாம். நான்கடிகளும் ஓரெதுகைப் பெற்று வரும். 1,5,7,11 ஆகிய சீர்கள் மோனைப் பெற்றும் வரும். விளம் - மா, விளம்- மா, மா- காய் என்ற சீரிலோ. அல்லது மா, மா,காய்-மா, மா, காய் சீரிலோ அல்லது பத்து விளம், வரிதோறும் ஈற்றுச் சீர் காய் வந்து இரண்டு காய், அல்லது பத்து மா, ஒவ்வொரு வரியின் ஈற்றுச் சீர் காய் வந்து பன்னிரண்டு சீருக்கும் இரண்டு காய் வரும்படி எழுதலாம்.

நெருப்பலைப் பாவலர் இராம.இளங்கோவன்

**நேரிசை வெண்பா!**

**பிறர் நலம் பேணல்.**



தன்னலம் பேணாது தக்காரை உள்ளியே
கன்னலாய்ப் பேசியே கன்றலின்றி- நன்னெறி
தன்னி லொழுகியேத் தன்னிலைப் போற்றியே
நன்னயம் செய்தல் நலம்.

**2.உழைப்பே உயர்வு.**

கற்களைச் சிற்பி கருத்தாய்ச் செதுக்கியப்
பற்பலச் சிற்பமும் பார்த்திடக்- கற்பனையாய்ப்
பற்றி மனதில் படர்ந்திடச் செய்தவன்
நற்பணி நாளும் நனவு.

**3.இன்னிசை வெண்பா**

**இறைவன்.**

எங்கு மிருந்தே எழுமையும் காப்பவனே
தங்கியே நாளுமே தஞ்சம் அளிப்பவனே
மங்கா ஒளியை மனதினில் தேக்கியே
பங்கமின்றி ஆசிதனைப் பாய்ச்சு.

**நேரிசை வெண்பா.**

**கரம் பிடித்தேன் உன்னை.**

கண்டேன் ஒருநாள் கருத்தில் இருத்தியே
பண்ணாய் வடித்தேப் பகர்ந்தேனே-எண்ணத்தை
மண்ணிலே நன்றாய் மதிப்புடன் வாழவே
வண்ணமாய் என்னுடன் வாழ்.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# எங்கே போகிறோம்?

விளம்பரங்கள் தேடத் தேடி
வீண் கோஷம் அலைகிறது
களங்கள் துறந்து துறந்து
கழனிகள் முழுதும் அலறுகிறது

பாதங்களில் விழுந்து விழுந்து
பண்பாடு பாதாளத்தில் புதைகிறது
பாறைகளாய் இறுகி இறுகி
பயிர் நிலங்கள் புகைகிறது

ஏர் கண்டிஷன் மாளிகைகள்
எழுந்து நிற்கும் பெரும் தொல்லை
ஏர் கலப்பை விவசாயம்
எங்கே போச்சு தெரியவில்லை

குடிநீர்த் தேவைக்குக் கூட
கூடாத கோ(கொ)டிக் கலவரம்
குடிகெடுக்கும் கடைக்கு
கோடி மக்கள் நிலவரம்

அழியும் நிலையில் தமிழுக்கு
அடைமொழிகள் வீசுகிறோம்.
எழுதாத தலைமுறையை
எண்ணியெண்ணி வியக்கின்றோம்

பண்பாட்டின் அணியென்று
பெண்ணைப் போற்றுகிறோம்
புண்பட்ட போட்டிகளில்
புடவை களைந்து காட்டுகின்றோம்



சேய் வளர்த்து சிகரமாக்க
தாய்ப்பால் தரும் தனங்களை
வாய் வைத்து வக்கிரமாய்
வழித்தெடுக்க காட்சியாக்கினோம்

தான் உழைத்துச் சேய் வளர்த்து
தரணிக்குச் சிறப்பாக்கும் தந்தை
வீண் சோம்பலில் விழுந்தால்
சேய் வேலைக்குச் செல்லும் விந்தை

எந்தையும் தாயும் மகிழ்ந்துலாவி
இன்பமென இருந்தது ஒரு காலம்
எல்லா வேலையும் தொலைக்காட்சி புகுந்து
சிந்தை தொலைத்தது இக்காலம்

பார் புகழ பணம் தேடிப் பறக்க
பெற்றோருக்கு படு தாகம்
யார் இவர் என்றே பிள்ளை
கேட்கும் அந்தோ பரிதாபம்

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# வெளிச்ச இரவுகளா?

விளைந்திடும்
நிகழ்வுகள்
விடிந்திடா
இரவினில்
வெளிச்ச
விடியலில்
காத்திருக்கிறதா?
காதலிக்கிறதா?
பகைகளை
பழிதீர்க்கிறதா?
பரிவுகளின்
வழி தேடுகின்றனவா?
புரிதல்கள் இல்லாத
இருளில்
யானையைப் பார்த்த
குருடர்களின்
யாப்பிசையாய்
கொண்டாடப்படுகிறதா?

வெளிச்சப் படுதாக்களின்
திரை விலக்கி
வெள்ளையடிக்கப் படுகிறதா?
வெண்கவ நாணின்
ஓசையெழுப்பி
தீப்பிழம்பின் அச்சம்
கௌரவிக்கப் படுகிறதா?



கணக்குகள்
தவறாகி
தடுமாறும் அலைக்
கழிந்த நெஞ்சங்கள்
புதியதாக கதைகள்
சொல்ல முயல்கிறதா
கேள்விகள்
வேள்வியாகிறதே.
வெப்பத்தில்
நாளங்களும்
வியர்த்துப் போகிறதே.
வழி தடுமாறும்
வெளிச்ச இரவுகளின்
அசையாடும் நிழல்களின்
பிம்பங்களின்
பிரதிபலிப்புகள்.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# கடந்திடுமோ காயம்



தாகம் தீர்க்கும் தண்ணீரைப்போல
சோகம் தீர்க்கும் கண்ணீராய்
எதிர்ப்பார்பில் விளைவாகும் ஏக்கப்பிரதிகள்

ஏலனமாகும் ஆசைகளின் நிராசைகள்
ஏவலாகும் தேவைகள் நிமித்தங்கள்
குரோதங்கள் மாறும் பிரேதங்கள்

எல்லாம் சூடிக்கொண்ட வாழ்வை கடக்கவே
ஏனிந்த வாழ்வென்ற எண்ணம் பிறக்கும் போதெல்லாம்
சோர்ந்து போகிறது மனது

மாற்றமே வருமா
மாயமே மாற்றமா
மற்றம் தட்டும்
வார்த்தை பேசும் மனித மூச்சுக்கு தெரிவதில்லை
அந்நேர எம் பிரதிபலிப்பு

கவிஞர் சஹ்னாஸ் பேகம், இலங்கை

# குறுங்கவிதைகள்

எனக்குப் பரிந்து
பேச வந்தவர்
எதிராளி செல்வந்தர்
எனத் தெரிந்ததும்
கொஞ்சம் கொஞ்சமாய்
தர்மத்தைத் துறந்து
அதர்மத்தின் பக்கம்
சாய்கிறார்.
/
சுமார்
இரண்டுமணி நேரமாக
மண்ணும் மழையும்
பேசும் உரையாடலைக் கேட்டு
ரசிக்க விடாமல் செய்கிறார்கள்.
தொலைக் காட்சித் தொடரில் வரும்
என் பேத்தி அவந்திகாவின்
நெருங்கிய நண்பர்களான
டோராவும் புஜ்ஜியும்.
/
புருவங்களுயர்த்தி
கேள்விக் கணைத் தொடுக்கிறேன்.
இதழ்களை விரித்தும்
விரிக்காமலும்
பதிலென புன்னகைக்கிறாய்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# வேறென்ன இருக்கக்கூடும்?

ஒரு வாழ்த்து
ஒரு சிலாகிப்பு

ஒரு நக்கல்
ஒரு திட்டு

சிறு கோபம்
சிறு நெகிழ்வு

ஒரு அடம்
ஒரு ஊடல்

ஒரு இனிப்பு
ஒரு உதவி

ஒரு புன்னகை
ஒரு புரிதல்

சிறு அன்பு
பெரும்பிரியம்

வேறென்ன எதிர்பார்ப்பு
இருக்கக்கூடும் நேசப்பரிமாற்றத்தில்?



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# மணிமேகலை (இருபத்தி ஏழு)

26. வஞ்சி மாநகர் புக்க காதை

கண்ணகி கோட்டத்தில் தாய்தந்தையரை வணங்கினாள்
எண்ணமெல்லாம் தாயைநினைந்து கண்ணீர்விட்டாள்
திண்ணமான மதுரை தீக்காடாக்கிய காரணம் கேட்டாள்
கண்கலங்கி நின்ற மகளிடம் சிலைகண்ணகி பேசினாள் .

அன்பு கணவனுக்கு நேர்ந்தது நியாயமாகுமா
துன்பத்தைப் பொறுக்கமுடியாத பெருஞ்சினம்
வன்மத்தின் ஆக்கமே மதுரை தீக்காடானது
அந்நேரம் மதுராபதி தெய்வம் தோன்றியது


( மதுரா தெய்வத்தின் விளக்கம் )
சங்கமன், மனைவி நீலியுடன் பொருள் தேடி வந்தான்
சிங்கபுரத்தில் அவனை ஒற்றன் என்றான் ஒரு பரதன்
சங்கமன் கொலையுண்டான் நீலி அழுது அலறினாள்
ஆங்கவள் இட்ட சாபம் இப்போது விளைந்தது அறிக

''இந்நிலைக்கு ஆளாக்கியவர் இதே நிலையை அடைவர்
நீலி இட்ட சாபம் இப்பொழுது கண்ணகிக்கு நேர்ந்தது
முன் செய்த தீவினை விளைவை தந்தே தீரும், தவறாது
தன் வினை தன்னைச் சுடும் நெஞ்சம் மறப்பதில்லையே

தெரிந்தும் கண்ணகி சினம் மதுரை மாநகரை அழித்தது
புரிந்து செய்த நல்வினைஉயிரோடு வானுலகம் வந்தனர்
வருத்தமான செய்தி இவர்கள் மீண்டும் பிறவி எடுப்பார்கள்
இருவரும் கபிலநகரில் பிறந்தும் இறந்தும் துன்புறுவார்கள்

வீடுபேறு எனும் கரையை கடக்க புத்த ஞாயிறு தோன்றும்
மாடுபோல் மந்தை, மனிதன் வாழ்வு தெளிவு பெறுவான்
ஈடு செய்யமுடியாத துன்பம் காமமும் ஆசையுமே ஆகும்
நாடு முழுவதும் அறக் கதிர்களை பரப்புவதே அவர் கடமை

பத்தினிக் கடவுள் மணிமேகலையிடம் தனியே கூறியது .
நகரினுள்ளே சமயவாதிகள் கூறுவதை முறையாகக் கேள்
நிகரற்ற உண்மைத் தன்மை இல்லை என்பது நீ அறிவாய்
சிகரம் போன்ற புத்தனின் திரிபிடக நெறியை மறவாதே
மகராசியான உனக்கு இப்பூவுலகில் கடமைகள் உண்டு




தன் இளமை, அழகு இருக்கும்வரை இடையூறுகள் வரும்
தன் உருவத்தை ஒரு தவமுனிவன் வடிவத்தில் மாற்றினாள்

சேரன் செங்குட்டுவன் கங்கயை கடந்து இமயம் சென்றான்
அரண் போன்ற கோட்டை ஆளும் கனகவிசயர்களை வென்றான்
சிரசின் மீது சுமந்த இமயகல்லில் சிலை வடித்தான் அவர்களுக்கு
சேரன் வஞ்சிமா நகரில் பத்தினி கோட்டத்தை எழுப்பினான்.

தொடரும்...

கவிஞர் ந. திருக்கராமு

# விதிவிலக்கு

கல் என்று கழித்து வைத்தாய்
கற்கும் படி தூண்டி வைத்தாய்
புல் என்று தள்ளி வைத்தாய்
பொறுமை தனைச் சூட்டி வைத்தாய்
வில் என்று வெளியில் வைத்தாய்
விரைந்து செல்ல அம்பை வைத்தாய்
வேல் என்று நாட்டி வைத்தாய்
விழியில் அன்பை வழிய வைத்தாய்
***
பல் என்று தேய்த்து வைத்தாய்
பளபளக்க வழியை வைத்தாய்
வால் என்று பொருத்தி வைத்தாய்
வான்வெளியில் பறக்க வைத்தாய்
கால் என்று இகழ்ந்து வைத்தாய்
கனதூரம் நடக்க வைத்தாய்
நில் என்று நிறுத்தி வைத்தாய்
நடுகல்லாய் நிலைக்க வைத்தாய்



கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், வெல்லபதியான் (இலங்கை)

# சிற்றிடை மேகலையாய்ச் சுற்றுதடி இதயம்

மங்கையின் வனப்பிலே
சிலிர்ப்பானது நெஞ்சம்
குறுநகைப் புரிந்திட
குதூகலமானது கொஞ்சம்
சில்வண்டின் ரீங்காரமாய்
எனக்குள்ளே கொஞ்சும்



எண்ணத்தின் ஆசைகள்
சிறகை விரிக்கும்
கார்குழல் காற்றிலாட
மனமும் தஞ்சம்
காரிகையின் கண்களும்
காந்தமாய் ஈர்க்கும்

மெல்லிடை அசைந்திட
மேகமாய்த் தவழும்
சிறுநடையில் சிந்தையும்
சில்லென்று குளிரும்
இதழமுதம் பருகிடவே
ஆவலிங்கு மீறும்

விம்மிடும் அழகில்
வியப்பு உருவாகும்
காதல் பேச்சில்
லோலாக்கு அசைந்தாடும்
எடுப்பான நாசியும்
ஏந்திழைக்கு எழிலாகும்

மைவிழியில் மயங்கியே
உள்ளமும் உருகிடும்
சிற்றிடை மேகலையாய்ச்
சுற்றுதடி இதயம்
நீதான் எந்தனது
வாழ்வின் உதயம்

வசந்தத்தின் வரவாய்
என்னுடன் இணைந்திடுவாயே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# நினைவுகள்

"நேற்று" இல்லாமல்,
இன்று இல்லை;
நாளையும் இல்லை!

நினைவுகள் இன்றி,
நாளைக்கான வனைவுகள் இல்லை.

நிழலைக்காண
விழையாதிருக்கலாம்!
நிழல் அழியாதிருக்குமோ?



எண்ணறா நினைவின் அலைகள்,
வாரிதியின் அலைகள் போல்.

கரை தாண்டாதிருக்கும் வரை,
காணவிரும்பா நிழல் எனக் கொள்க.

நீர் மேல் அலை என்று நினைக்கத் தண்மை
நீறு பூத்த நெருப்பு எனக் காணில் வெம்மை.

விரும்பிடினும், விரும்பாவிடிலும்,
இறுதி வரை நிற்கும்;நெஞ்சில்.

எஞ்சுவது, இன்பமாகட்டும்.
மிஞ்சுவது இனிக்கட்டும்.

துஞ்சும் காலம்வரை,
கொஞ்சம் அமைதி காண்.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# குறிப்பறிதல்

## அதிகாரம் : 71

முகநோக்கிக் கருத்தறியும்
திறம் பெற்றோன்.
சமுத்திரம் சூழுலகின்
அணிகலனாய்த் திகழ்வான்.

மற்றோருள்ள எண்ணங்களை
சற்றும் ஐயமிலாவகையில்.
உற்றுணர்ந்துகொள வல்லோனே
போற்றுதெய்வத்திற் கொப்பாவான்.




முகக்குறிப்பால் அகக்குறிப்பை
உணரவல்லோனை நமக்காக.
எவைகொடுத்தேனும் பெற்று
துணையாக்கிக் கொளல்நலம்.

உள்ளக்கருத்தை ஒருவன்
சொல்லுமுன் அறியவல்லோரோடு.
உள்ளபடியொத்த உறுப்புடையவரெவராயினும்
அறிவாலவர் வேறுபட்டோரே.

உள்ளக்கருத்தை குறிப்பாற்காட்டினும்
உணரவியலா தொருவனுக்கு.
உடலுறுப்புகளில் கண்களிருந்தும்
என்ன பயன்தருமோ?!.

எதிர்பொருளின் உருகாட்டும்
பளிங்குபோல் ஒருவரின்.
எண்ணமதைத் தெளிவாய்க்காட்டும்
அவர் திருமுகமே.

மகிழ்வையும் சினத்தையும்
ஒருவர்க்கு முகமேகாட்டுமாம்.
அம்முகத்தினிலும் அறிவுடையது
வேறேதும் உளதோ?!

உள்ளக்குறிப்பறிந்து உற்றுணரவல்ல
ஒருவரை தமக்குற்றதுணையாக்கிடின்.
அவரெதிரே சொல்கூறாது
நிற்றலொன்றே போதுமானதாம்.

கருவிழிகொண்டு கருத்தை
உணர்வோரின் துணைபெற்றால்.
ஒருவரின் பகைநட்பையும்
அவர்கண்களே உணர்த்திவிடும்.

நுண்ணறிவுடையோர் திறனறியும்
அளவுகோல் யாதெனின்.
அவ்வன்மையுடையோர் கண்களே
அல்லாமல் வேறொன்றில்லை.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# அறம் எழுந்தது

விசும்பு சுருங்கி
வானூர்தி நொறுங்க!
செந்தழல் தின்ற சிறகுகள்
புனல் கரைத்த மெய்!
தீயோன் வீழ்ந்தான்
பெருவெளி காத்திருப்பு
நிறைவானது.
அறம் மெல்ல எழுந்தது
அமைதி மலர்ந்தது.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# மழைக்கால நிலவு

ஒரு துளி மழைத்துளி
பதம் பார்த்தது மண்ணில்
சிறுகாம்பின் புல்நுனி
ஸ்பரிசம் கொண்டது மெல்ல

வெள்ளிக்கம்பியின் நூலிழை
விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில்

மழைக்கால நிலவு தன்னில்
வாசம் கொண்டது ஈரமண்ணில்
ஜன்னலோர நிலவு தரிசனம்
நாளும் சொன்னது ஒரு துளிப்பா

ஆரம்பப் பள்ளிப் பருவத்தில்
மழைநீரில் காகிதக் கப்பல் விட்டது
வானத்து நிலவிடம் சென்று
வாங்கி வா பட்டம் என்றது

அந்திமாலை முன்னிருட்டில்
பௌர்ணமி நிலவின் தரிசனம்
என்றும் இளமைக்கால ஒளிக்கீற்று

மழைக்கால நிலவினைத் தேடி
அனுதினமாய் ரசிக்கிறேன்
ரசித்து ரசித்து வியக்கிறேன்

நிலவின் மடியில் ஒரு துளி -அது
மழைக்கால நிலவின் பனித்துளி



கவிஞர் மு செந்தூர்கனி, முத்துகிருஷ்ணாபுரம் (தூத்துக்குடி

# முரண்பட்ட பழக்கம்

அவள் அப்படி தான்
பழக்கப்படுத்த பட்டிருந்தாள்
எந்த ஒரு சுபநிகழ்வுக்கும்
முன் வரிசையில் அமராதபடிக்கு
மலர்சூடும் உரிமையற்றவளாக
உடைகளிலும் கட்டுப்பாட்டுடன்
திருட்டு பூனைபோல
சாலைகளில் பதுங்கி நடக்க
இயற்கை தேவைகளை கூட
கொலைகுற்றமென கருதிட
வட்டமிட்டும் கழுகுகளின்
நகங்களுக்கு அகப்படாது ஓட
சுயபட்சாதாபத்துடனே
ஒதுங்கி ஒடுங்கி வாழவேண்டியே
பழக்கப்பட்டிருந்தாள் அவள்
குழந்தைகளை காரணம்காட்டியே
அவர்களும் இதை
பழக்கப்படுத்தினர் அவளுக்கு
அவளைபோன்றே துணையிலந்த
அந்த நடுத்தரவயதுடையவனுக்கோ
நடந்தது திருமணம் அவள் வயதொத்த
தோழி ஒருத்தியுடன்
அதே குழந்தையை காரணம் காட்டி



அப்பாவின் காலணிகள்
------------------------------
கண்ணாடி சாரளத்துக்குள்
மினுமினுக்கும்
பிரபலமான காலணிகளுக்கு
மத்தியில் தேடித்திரிகின்றன
அந்த ஒரு ஜோடி கண்கள்
அதன் சல்லடையிடும்
தேடுதலில் சிக்குண்டது
தேவதையின் படம்பொறித்த
வண்ணமயமான காலணிகள்
விலைகூட கேட்கப்படாமல்
வாங்கப்பட்ட காலணியோடு
வாயிலில் தேடுகிறார் அப்பா
மரணத்தின் விளிம்பில் தவிக்கும்
தன் காலணிகளை

கவிஞர் ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன், தென்காசி

# கனவில் வந்த தலைவர் பன்முகக் கலைஞருடன் உரையாடல்

வணக்கம் தலைவரே, வங்கக் கடலோரம்
வாய்மணக்க அண்ணா அண்ணா என்று
தாங்கள் கொண்டாடிய தங்கத்தலைவரை விட்டு
தமிழாசான் என்னிடம் வந்ததேன் ஐயனே!

அன்னைத்தமிழை வளர்க்கின்ற தமிழாசான் உமக்கு
என்னைப்பற்றி என்னத்தெரியுமென அறிந்திடுமாவலால் வந்தேன்!

குழந்தையுள்ளம் கொண்டவர், போர்க்குணம் மிக்கவர்,
குவலயமிதில் நீவிரே முத்தமிழ்வித்தகர், பன்முகத்
திறமை கொண்ட கலைஞர், கவிஞரென
திக்கெட்டும் தீந்தமிழுலகம் உமைப்புகழ்வது அறிவேனே!

ஓஓ! அப்படியா! தமிழ்த்தாய் வாழ்த்தை
ஓயாது பாடும்வாய்ப்பு பெற்றீரதுபற் றியுரைமின்!

அன்னைத்தமிழை வாழ்த்தும் "நீராடும் கடலுடுத்த"
இன்றும் பாடும்படிசெய்தவர் நீவிரென அறிவேனே!
அதிலொரு குறையுண்டு அடியவனுக்கதை உரைத்திடுவேன்;
அந்தப் பாடல்பழையது; புதியது இசைத்திடவாசை;
"செம்மொழியான தமிழ்மொழி"யென கவிஞர்நீவிர் இயற்றியதை
செந்தமிழ்நாட்டின் வாழ்த்துப்பாடலாய் பாடிடயின்னும் யாருமிங்கு
சட்டமியற்ற வில்லையே என்றக்குறையே இன்றுமுளது!



மகிழ்ந்தேன் ஆசானேயென் அருமைப்பாடலை மறவாமைக்கு;
மீண்டும் இன்னொரு முறையும்மை சந்திக்கிறேன்;
அவசரமா கலைஞரே, குறளோவியம் படைத்தபிரம்மனே,
அடியவனுக்கொரு வினாவுண்டு உம்மிடம் வினவ,
அயற்சியற்ற தாங்கள் பயின்றது எட்டாம்வகுப்பே;
எட்டியதெப்படி இமயவளவு, கடலளவு தமிழறிவை?

குறளோவியம் படைத்தவனிம் கேட்டவினா நல்லவினா;
கற்றீரோ நீவிரும் திருக்குறள் முழுவதும்!
குறளொன்று சொல்லும், குவலயத்தில் வாழ்வோர்க்கிங்கு
கற்றவறிவினும் இயற்கையறிவே முந்துறுமென்றவர் உரைத்திடவென்
கனவுகளைய கையிலிருந்தது "பன்முகக்கலைஞர்" கட்டுரையே!

**கலைஞர் நினைவூட்டிய திருக்குறள்:**

---------------------------------------------------------------

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.(ஊழ்வினை அதிகாரம், குறள்:373).

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# பூக்களின் வாசங்களில் இவள் வாசகங்கள்

மழைக்கால மேகங்களின்
மென் பனித் தூவல்கள்.
வண்ண வண்ண
வர்ணங்களால் மை பூசிய
ரோஜாக்களின் இதழோரங்கள்.
ஈரக் காற்றின் ஸ்பரிஸங்களால்
மெல்லச் சிரிக்கின்றன.

பூக்களோடு தினம் தினம்
உறவாடும் பூவையிவள்
பூவிதழ்களும் சேர்ந்தே
பரவசத்தால் நனைகின்றன.
நீ வாங்கித்தந்த
என் ரோஜாக்களில்
பனித்துளிகள் ஒவ்வொன்றும்
வைரப்பளிங்குகளாய் தினம்
ஒளிவீசுகின்றன.



சுகந்த சுவாசங்களில்
தினமும் இவள்
இதய நாளங்கள்
நனைந்து குளிர்கின்றன.
புதுப்புதுப்பிரசவங்கள்
நான் நட்டதாலா இல்லை
நீ தொட்டதாலா.
புரியவில்லை, அடிக்கடி
அழகழகாய்
மொட்டவிழ்க்கின்றன.

என் எழுத்துக்கள்
பேசும் பாஷைகள்
உனக்குப்புரியாவிட்டாலும்
உன் நேசங்களால் பூக்கும்
பூக்களின் வாசங்கள்
என் வரிகளின் தாளங்கள்
என்பது உனக்கு புரியலாம்.
இவளின் சந்தோஷங்கள்
அவையே முகநூலின்
அலங்காரங்கள் என்பது
உனக்குப்புரியலாம்.

கவிஞர் ஆய்ஷ்

# ஓ பணமே!



பலரின் பொருளாதாரத்தில்
ஒளிந்து கொண்டிருக்கிறது

பணம்
பணமே உன்னை கண்டெடுக்க
என்ன செய்ய வேண்டும்
என்று சொல்லிவிட்டு ஒளிந்து கொண்டால்
தேடுபவருக்கு எதுவாக இருக்கும்
தேடி கலைத்து விரக்தியின் உச்சியில்
இருப்பவர்களுக்கு சற்றே ஆறுதலாக இருக்க
சிறுகுறிப்பு தருவாயே பணமே!?

ஓ பணமே!
உன்னை கண்டு எடுக்க காத்திருக்கிறார்
பல பேர் அவர்கள் கண்ணில் படுவாயா!
கையில் கிடைப்பாயா!
பணம் கையில் கிடைக்க செய்யும்
இறைவா நன்றி!

கவிஞர் ஜெ. தேவிராஜசேகர், சென்னை, செங்கல்பட்டு மாவட்டம்

ஏன் வைக்கவில்லை
ஏன் வைக்கவில்லை
என்ற ஒற்றை கேள்வியில்
ஒரு பெண்ணின்
தனிமனித சுதந்திரத்தை
நெற்றி பொட்டில்
அடக்கி விடுகின்றனர்
இன்னும் சில ஆண்கள்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# என்னவளே

காயம்பட்ட என் காதலின் அழகான
கவிதை நாயகியே

தொலைந்த போன உன் முகம் தேடி
வீதிகளில் புழுதியாய் நான்

கோபத்தின் வாசலில் காதலை தொலைத்தவளே
தேடுகிறேன் உந்தன் நிழலை

சிறு ஊடலில் உள்ளத்தை உலுக்கியவளே
உடைந்து போனேன் உதிரிகளாய்

காதலே திரும்பி வா திசை எட்டும்
உன் முகம் மட்டுமே திங்களாய்

உந்தன் பிரிவால் நான் பேச மறந்த
வார்த்தைகள் ஊமையாகும் முன்பே
சொற்களாய் நீ வா

என்னவளே மீண்டும் வீசட்டும் உன்
காதல் என்னுள் என்றும் தென்றலாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நடிப்பு

உலகமே நாடக மேடை நடிக்க
சொல்லிய கொடுக்க வேண்டும் மானுடனுக்கு
அவன் நினைப்பதை நடித்துக் காட்டுவேன்
எத்தனை முகங்கள் அவனுக்கு வித்தியசமான
நடிப்பு வேஷத்திற்கு ஏற்றாற் போல
பொய் முகங்கள் தான் அதிகம்
கில்லாடிகளின் நடிப்பை உண்மை என்றெண்ணி
ஏமாறுபவர் எத்தனை பேர் அத்தனையும்
நிஜத்தில் நடந்தாலும் ஆச்சரியம் தானே
நாடக உலகில் எல்லாமே நடிப்பே



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# அன்பர்கள் அளித்த தனிமை

அதீத அன்பு வேண்டாமென்று
ஆரம்பத்திலேயே
அறிவிக்கை செய்துவிடுங்கள்


அந்த அன்பர்கள்
அந்நியப்படும்போது
அளவுக்கதிகமாகவே
துடித்து விடுகிறோம்

சுற்றி யாவரும் இருந்தும்
தனியாய் இருப்பதாய் உணர்வு
அவ்வளவாக எளிதாக
ஏற்றுக்கொள்ள முடியவில்லை.



கவிஞர் இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

**தென்றல் என்றெண்ணி**
**கண் திறந்து நின்றேன்**
**வீசியது மணல்காற்று.**



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# ஆயுள் கைதி



கரங்களுடன் கரங்கள் கோர்த்து
கார்முகிலை ரசித்தபடி

மணலில் கால்கள் புதைந்திட
மங்கையவளும் உடன் இருந்திட

விழிகள் நான்கும் கதை பேச
விருப்பத்துடன் இணைந்து நடந்திட

கம்மலின் ஜிமிக்கியும் அசைந்தாட
கண்கள் விரிந்திட கார்முகிலை ரசிக்க

மாமனவன் வாங்கித் தந்த தாவணியில்
மாமன் பொண்ணே நீ என்னுடன் இருக்க

இயற்கை அன்னையை ரசித்தபடி
இனியவளும் இன்புற்றிருக்க

என் ஆசை ரத்தினமே உனக்கு
என்றைக்கும் ஆயுள் கைதி நானடி!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்



பொன்னும் பொருளும்
குவிந்திட்ட போதும்
எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்

மண்ணில் உயிர்கள்
மாண்புடன் வாழ
கல்வி யொன்றே
கலங்கரை விளக்கு

கற்றோர் மட்டுமே
இரு கண்ணுடையோர்
கல்லாதார் முகத்தில்
இருப்பது புண்களே

வள்ளுவர் வாக்கை
வாகாய்ப் பற்றிட
வாடியே நிற்காது
வாசனை தந்திடும்

பிறந்த பயனை
முழுமையாக அனுபவிக்க
சிறந்த தன்றோ
அறிவார்ந்த வித்தை

கற்றலைத் தொடரத்
தடைகள் வரலாம்
தடைகளைத் தகர்த்திடும்
மனத்திடம் வேண்டும்

வறுமை வாட்டி
வதக்கிய போதிலும்
பொறுமை பூண்டு
கற்றிடல் நன்றே

கற்போம் கற்போம்
கசடறக் கற்போம்
நிற்போம் தரணியில்
தலை நிமிர்ந்தவர்களாக

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

# வேண்டும் அவகாசம்



தறி கேட்டோடும் காலத்திடமிருந்து
வேண்டும் சிறு அவகாசம்

காலம் அதை நிகழ்த்தியிருக்கக்கூடாது
காலம் இன்னும் அவகாசம் தந்து இருக்கலாம்
அந்த மரணத்திற்கு.

மரணத்தின் மீது விழும் பழிகள் வெகு சீக்கிரம்
அகன்றுவிடுவதில்லை
மரணத்தின் போக்கை மாற்ற யாராலும் முடிவதில்லை

மரத்தின் இலைகளை உதிர்த்துவிட்டு
வேடிக்கை பார்க்கும் காற்றைப்போல
காலம் சிலரது வாழ்வை நிலைகுலைய செய்து விடுகிறது

எல்லோருமே தினமும் மரணத்தின் வாசலில்தான்
தலை வைத்து தூங்குகிறார்கள்.

கூடுகட்டி முட்டையிட்டு வாழும்
பறவையின் கூட்டை
யாரேனும் கலைத்தாலோ
முட்டையை தொட்டுவிட்டு சென்றாலும்
அந்த பறவைகள் அதே கூட்டில் மீண்டும் வாழ்வதில்லையாம்

அதுபோலொரு வாழ்வை
காலம் நிகழ்த்தி விடுகிறது சிலருக்கு!

கவிஞர் சீ. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

# அயலகத்து மோகம்

ஆயிரம் தொழில்கள் இங்கேயிருக்க
ஆண்டவன் துணையும் ஒருங்கேயிருக்க
அடிப்படை வசதியும் போதுமானதாய் இருக்க!
அப்படியொரு ஆசை அடிமனதில் ஏனோ!

வயிறார சாப்பிடவும் வாழ்விடமும் இங்கிருக்க!
கடல்தாண்டி செல்கின்ற அயலகத்து மோகம்தான் ஏனிங்கே?
ஏழுவகை வள்ளல்களால் வாரிக் கொடுத்த பூமியிது
பாழும் ஆசை கொண்டதனால்,
வாழும் சொர்க்க பூமிவிட்டு,
போனதனால் கிடைப்பதெல்லாம்,
பொன்பொருளது கூடவே,
புண்ணாகிய வயிறும்தான்!
தன்மனைவியின் தழுவலின்றி,
பெற்ற பிள்ளைகளின் முத்தமின்றி,
அயலகத்தான் ஏவலினால்,
அன்றாடம் உழைத்திட்டும்
ஆறுதலின்றி தவிக்கின்ற,
ஆசையது தேவைதானோ!
வாழ்ந்தாலும் கேட்பாரில்லை
செத்தாலும் தூக்குவாரில்லை!
நித்தம் பொழுதும் உழைத்தாக வேண்டும்!
நிம்மதியை தொலைத்தாக வேண்டும்!
தென்றலது சுகமாய் தவழும்
சொந்த பூமியின் சுகம்தனை விட்டு,
குளிரூட்டியின் குத்தகையில்,
இளமையுந்தான் தொலைந்தே போகும்!



எண்ணமது சிறந்திட்டால்
இருக்குமிடம் சொர்க்கமாக்கி,
அயலகத்து மோகம்தனை அறவேதான் கைவிட்டு
பொன்னான பூமியிலே புகழோடு வாழலாமே!

கவிஞர் ஆர். எம். சாகிதா, கூடலூர் (நீலகிரி)

# விதி மாற்றம்

ஒற்றை புள்ளியில் யாவும் முடிவென
முற்றுப்புள்ளியிட்டிடும் யாதுமானவை தான்
நாணய இரு பக்கமாய் நன்மை தீமை என
விளைவினும் வடிவில் இறுதியாயிடும் வாழ்விது

கடைத் தருணமும் மாற்றங்கள் நிகழலாம்
கடை நொடியதில் உன் சிந்தனை மாறிடின்
ஒற்றைப் புள்ளியது ஒற்றுமையாயிடின்
தொடர் புள்ளியால் உன் முடிவும் மாறலாம்



வழமையென நேர்கோடாய் சென்றிட
வழிப் பாதைகளும் வழி விட மறுப்பதேனோ
மாற்றம் அது நிகழ வேண்டினின்
இறைநாட்டம் அதுவொன்றே போதுமே

இப்படித்தான் நிகழுமென நெகிழாதிருப்பினும்
பிரார்த்தனை வழிதனில் நெகிழ்வும் பிறக்குமே
பிடிவாதமாய் உன் வேண்டுதலது இருப்பின்
பிடித்ததாய் இறைவிதி உன்னில் மாறலாமே

நடப்பன யாவும் அவன் வழிதானே
கடப்பது அதுவோ எம் இயல்புதானே
பொருந்துதலோ எம் மனத்தினிடத்தே இருப்பின்
மனவலியதுவும் சுகமாகும் எம்மகம் தனிலே

தீராத் தேடல்கள் தீரா வேண்டுதலாய் இருக்கையில்
அலட்சியமதுவும் எம்மிலகன்று இருக்கையில்
இறைவனுடனான எம் தொடர்பது பலமாயிருப்பின்
விதிமதியும் உன் சார்பாகிடும் உனதான பிரார்த்தனை வழியதில்

கவிஞர் ஹாஸ்மியா தாஹா, கெக்கிராவ (இலங்கை)

# ரயில்தடமும் நானும்



□ கண்ணுக்கெட்டிய தூரம் வரை
யாருமற்ற இருள்
சற்றுமுன்னதாகக் கடந்திருக்கலாம்
பயணியருடன் அந்த ரயில்
ஆங்காங்கே குப்பைகள்
புகைகூட மறையவில்லை.

□ மீண்டும் எப்போது வேண்டுமானாலும் வரலாம்
இது வாடிக்கை தான் என்றாலும்கூட
வாழ்க்கையின் நிகழ்வோடு
ஒத்துத்தான் போகிறது.

□ நீண்ட பயணம்
சன்னலோர இருக்கை
எதிர் இருக்கை
காலியாகவும் இருக்கலாம்
பெருத்த இரைச்சலாகவும்
இருக்கலாம்
ஆனாலும் எனக்குள்
அத்தொடரியின் இரைச்சல்போல்
ஏதோ அழுத்தம் நீண்ட நாளாகவே இருக்கிறது.

□எத்தனை அமைதியிலும்
தகரக் கொட்டகைமீது
விழுந்தொழுகும் நீர்த்திவலைகளாய்ப்
பட்டுச் சிந்தனை கலைக்கிறது

□எதைப்பற்றியும் கவலை கொள்ளாது
பேசிக்கொண்டே இருக்கும் அவளைப்போல்
இன்னும் அதிகமாய் கேட்டுக்கொண்டேயிருக்கிறது

□எத்தனை தூரம் நடந்தேன்
தெரியவில்லை
குண்டூசி விழுந்தாலும் கேட்கும்
அப்படியொரு நிசப்தம்
அவள் போன அன்று கூட
இப்படித்தான் இருந்தது.

□ வாழ்வின் இறுதி பயணம்
காய்ந்த சருகளாய்
மெல்ல அடித்துச் செல்லப்படுகிறது.
யார் முதலில் என்பதிலிருந்து
அவளே தான் முந்திப்போயிருக்கிறாள்

□முரண் இருந்தாலும்
கூடவே வரும்
இந்த ரயில் தடத்தைப்போல
நானும் அவளும்
எப்போதுமே இருந்து
இப்போது புரிகிறது.

கவிஞர் நாகா

# பெண்

காரிகையான பெண்ணவளும்
காட்டுப்பூவா? வீட்டுப்பூவா?

காடுமேடெல்லாம் உழைத்தோடுவாளே
காட்சிப்பொருளாய் ஆகிடுவாளே

காந்தமாக பற்றிடுவாளே
காவியம் பல படைத்திடுவாளே

காதலில் அவளே மணத்திடுவாளே
காவலாய் அவளுக்கு அவளே

காரிசமாய் இருக்கவும் செய்திடுவாளே
காப்பாளராகவும் திகழ்ந்திடுவாளே

காணுமிடத்தில் பரவிக்கிடந்தாலும்
காணுதற்குரிய அரிய மலரவள்

காண்பவர்க்கு வண்ணமட்டுமே
காணாத வலியெல்லாம் உள்ளுக்குள்ளே

காலம் முழுவதும் அழகுபடுத்திடுவாளே
காய்ந்தும் நறுமணமாகிடுவாளே

காததூர சென்றாலும்
காக்கும் வீட்டையே நினைந்திடுவாளே

காகிதபூவானாலும் மிளிர்ந்திடுவாளே
காடகத்திலும் மிதந்திடுவாளே

காப்பியங்களில் சிலிர்த்தெழுவாளே
காவானாலும் மணத்து மகிழ்விப்பாளே!



கவிஞர் நீலாசுபாஷ்

# இவன் இவனை எழுத ஆரம்பித்தான்

அந்த பேனாமை தீர்ந்த பாடில்லை,
அந்த காகிதக்கட்டு முடிந்த பாடில்லை,
இவனை யாரும்வந்து தடுத்த பாடில்லை,
மரணமே முற்றுப்புள்ளி வைக்கும் என்பார்,
அந்த காலனும் வந்து அழைத்த பாடில்லை,
இவன் படும் பாடுகளும் குறைந்தபாடில்லை.
இந்த காவியம் முடியும் காலம் அறிந்தபாடுமில்லை.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# சுமையிறக்க கூடும் இன்பம்

அளவிற்கு அதிகமான பொதிகளோடு
செங்குத்து மலைப்பாதையில்
மூச்சிறைத்தவாறு ஏறும் கழுதை
கூடுதலாய்ச் சுமக்கும் பொதிகள்
ஒவ்வொன்றாக கீழே விழ விழ
எளிதாகும் உச்சிக்கோவில் பயணம்



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# கருவறை



இலட்ச இலட்ச அணுக்களில்
முதலில் நுழைந்து
வெற்றியைப் பறித்து
ஜவ்வுபோல் தன்னைச் சுற்றி
உயிராய் உருவெடுத்து
கருப்பையின் வாய்மூடி
அடக்கமாய் உருவெடுக்கும்
உயிரோவியம்!
முதுகு வளைத்து
உடல் குறுக்கி
உதிரத்தில் மிதந்து
ஈரைந்து மாதம்
பொதிந்து வளர்த்த சிசு!
இதயத்தின் துடிப்பிலே
கை கால் முளைத்து
அசையும் அசைவிலே!
கருவறையின் சுவற்றிலே
தலையால் முட்டி
காலால் உதைத்து
நீந்தி வர வலிக்குமோ
என வளையல் அணிந்த
கையால் தடவி
மென்குரலில் பேச!
ஊனை உருக்கி உயிராய்
அமுதளித்து
எனக்காய் சுவாசித்து!
எட்டி நடக்கையில் எனக்கு
எங்கே வலித்திடுமோ?
என்று பொத்திப் பொத்தி
எச்சரிக்கையாய் எனைக்காக்க
உலகத்தையே எனக்காக
மாற்றி அமைக்கும்
தெய்வத்தின் சந்நிதியே!
மீண்டும் செல்ல விரும்பும்
அன்னையின் கருவறையே!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# அன்பே என்றும் துணை நிற்கும்



அன்பு என்னும் பாசக்கூடு
அது இதயம் சேர்ந்த உயிர் கூடு.

அன்பு என்னும் *இதயம்* தான்
தெய்வம் வாழும் *ஆலயம்*தான்.

உண்மை *அன்பு* என்றுமே
அழிவில்லாத செல்வமே.

உறவு கூட தரம் பார்க்கும் தகுதி செல்வாக்கு என
நிலை மாற்றும் உண்மை நிலையைத்தான் மறக்கும்.

சத்தியத்தின் துணையோடு; அன்பு என்னும் அகிம்சையாலே ;
பாரத மக்களின்அன்பை பெற்றாரே;
*மகாத்மா* நம் இதயத்தை வென்றாரே.

அறம் சார்ந்த வாழ்வுக்கு *அன்பே என்றும் துணை நிற்கும்*
அன்பாலே வந்த நட்பு உயிருக்கும் மேலான உறவாய் நிற்கும்.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேந்தியாத்தோப்பு

# பனுவல்

நேசிக்கிறேன் வாசிக்கிறேன்
உயிர் மூச்சாய் சுவாசிக்கிறேன்
என் தனிமையின் தேடலே நீதானே
என் தாகம் தீர்க்கும் மோகமே நீதானே
அள்ளி அணைத்து ஆராத்தழுவுவதும் உன்னை தானே
நீயின்றி நானேது
பனுவலே பாரில் பத்திரமாய் என்னை காத்தாய்
பக்குவமாய் அறிவூட்டினாய்
என் வாழ்வில் ஒளியூட்டினாய்
சிகரம் தொட ஏணியானாய்
இருக்க அணைக்கிறேன் ஆரத்த தழுவுகிறேன்
உன்னோடு ஒன்றினைந்து நடக்கிறேன்
என் தனிமையின் தோழனே.



கவிஞர் ஷியாஸ்னா ஃபைஸல், நாவலப்பிட்டி (இலங்கை)

பாமரர்கள் பசிதீர
விண்ணும் மண்ணும் இணைகிறது
மழையின் சங்கமம்



கவிஞர் ரா. ஜோதிமணி, பெரிய குமாரபாளையம்

# கறை

சாலையோர
புழுதி
தாண்டி
நிரந்தரமாக
கறை படிகின்றன
ஏதோ ஒரு
பிஞ்சுக் கைகளின்
கழுவல்களால்
தூய்மையாகும்
டம்ளர்களும்
எச்சித்தட்டுகளும்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# தாயின் நினைவுகள்

வலிகளை மறந்து
புன்னகைக்கிதுபோனால்
எனது தாய்,
நடவுக்கு காலமாகிவிட்டது என
அவசரமாய் தலைசீவி
பள்ளிக்கு அனுப்புவாள்
எனது தாய் .
மாலையில் வந்தவுடன்
உனக்கு கொடுத்த பலகாரத்தை
முடிச்ச அவிழ்த்து எனக்கு தருவாய்!
நான் வாழ நீயே செய்தாய்
தினமும் ஒரு தியாகம்
நீயே எனக்கு முதற்கடவுள் என
நித்தம் நினைவுகளுடன்!



கவிஞர் ரெ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

# நினைவு செடி

நினைவு செடிகள்
பட்டு போவதில்லை
பூக்களில்லை மணமுண்டு
மனதினுள்



பதியங்கள் ஏராளம்
மனப்பந்தலில்
பின்னலிட்ட கொடிப் போல்
வார்த்தைப் பூக்கள்

வசியத்தின் வசீகரம்
அசைத்ததில்
நினைவு செடி குலுங்கலில்
உதிரும் எண்ணங்கள்

வலியின் வேதனை
முகம் தூக்கியதில்
அசைவின்றி நினைவு செடி

நீருமின்றி நிலமுமின்றி
வேருன்றி நிற்கிறது
மவுனம் அசைபோட
கனிந்துருகி கசிந்துருகி
துரத்திய நாட்கள்
கனிகளாயி உதிராத
வண்ணத்தில்

தீயின் தகிப்பும் தாங்கிய
வாடாத நினைவு செடி
அன்பை ஆரத்தழுவிய
அழகிய பூக்களை தாங்கிய
நின்றாடும் நினைவு செடி

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# நீ உணர்த்திட

என் சிந்தனையாவும் நீ உணர
நான் வெளிக்கொணறும் தருணங்கள்
எரிச்சலாய் நீ உணர்த்திய கோபங்கள்
ஆழப்பபடிந்த என் காயங்கள்
உன் மீதான பயங்கள்
இவையாவும் காதலால் மாயமாகிட
சொந்தம் தேடி செல்லும் இடம் காண
நான் அச்சமாய் நித்திரை இன்றி
தவிக்கிறேன்.



நீ உணர்த்த இன்னும் மிச்சங்கள்
உண்டோ என.

உன் சிந்தனையும் அக்கறையும்
நான் திருட விழைகிறேன்.
வாய்ப்பளிக்க மறுத்து
விலகியபடியே நின் எண்ணங்கள்.

நீ அறியாமலே
உன் விரல் எனை தீண்ட
ஆசையோடு நாணங்களும்
கூச்சங்களும் பாய்கின்றனவே
மெய் படரும் கொடிக்கென.

நீ உணர்த்திட பல இருப்பினும்
நான் உணர்வேன்.
நின் மகிழ்ச்சிக்கென
என்உணர்வுகளுக்கும்
மதித்திப்பளிக்க எண்ணி
ஆவலாய் நானும் காத்து நிற்கிறேன்.

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# மாலவன் வைணவம் 48

## நாச்சியார் ஐந்தாம் திருமொழி

## ஆண்டாள் 18

குயிற்பத்து பாவொன்று: யாவரையும் முறையாக
ரக்ஷிக்கத்தக்க எம்பெருமான் என்றன்னை ரக்ஷிக்காவிடில்
சரிசெய்வது தீங்குயிலே உன்கடமை! எம்பெருமான்
உகந்ததாலோ எம்பெருமான் தன்னையே தானிச்சித்த
காரணத்தால் யான்மெலிந்தேன்! என்வளையல் கழல்கின்றதே!
பூங்குயிலே அவன்றன்னை விரைந்துவர கூவிடுநீ!
பாவிரண்டு: குயில்முனைந்து பரிஹாரம் தேடுதற்கு
அவள்நிலையை அதுவுணர்தல் வேண்டுவதே! அவள்தானே
தன்நிலையின் விளக்கத்தை விரித்துரைத்தல் நன்றாமே!
எம்பெருமான் தன்னுருவை கோதைக்குக் காட்டாது
உளம்புகுந்து நைவிக்கின்றான்! அவளுருவுடன் ஆடுகின்றான்!
தனிமையில் தவித்திடவே வைக்கின்றான்! வேடிக்கை
பார்க்கின்றான்! அவ்வேங்கடனை வரக்கூவு! பாமூன்று:
விரோதிகளை போக்கிட்டே சுகானுபவம் கொடுக்கின்ற
எம்பெருமான் தன்னிடத்தே வரும்படியே கூவிடுநீ
குயிலேயென வேண்டுகிறாள்! தலைவன்வரல் காணவில்லை!
காதலியுடன் மகிழ்ந்துவாழ் தீங்குயிலே என்னையும்
காதலருடன் சேர்த்துவிடு! அவனென்னுடன் கூடிவாழ
பூங்கூயிலே கூவிடுநீ! பாநான்கு: கருடக்கொடி உடையானை!
அழகனான எம்பெருமானை! என்னிடத்தே வரும்படிநீ
குரலெடுத்துக் கூவிடுக! வைகுந்தஞ்சேர் தோணியது
பெறாமையால் என்புருகி கண்ணிமைகள் பொருந்தலிலை!
காணாதும் உற்றிடாதும் துன்பத்தில் உழல்கின்றேன்!
அவன்தானே என்னிடத்தே வரும்படிக்கே கூவிடுக
குயிலேநீ ! அன்புடையோர் பிரிவுத்துயர் அறியாயோ?
பாவைந்து: வாமனனாய் முன்தோன்றி த்ரிவிக்ரமாய்
பின்வளர்ந்து ஈரேழு உலகினையும் தன்தாளால்
அளந்தவனை காணுதற்கே கோதையிடம் வரும்படியே
கூவிடவே வேண்டுகின்றாள்! அவள்வளர்த்த இன்கிளியை
தோழமையாய் ஆக்கினளே! அன்னம்நடை பயில்கின்ற
வில்லிபுத்தூர் எம்பெருமான் அடிமுடியின் முழுவுருவம்
காணுதற்கு வரும்படியே கூவுகநீ நற்குயிலே!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# அறிவினால் ஆகுவதுண்டோ?

கடவுள் இந்த முறை வந்திறங்கியது மருத்துவமனை
அதன் முகமே மாறிப்போயிருந்தது
குழப்பம் சற்றே மேலிட்டது
முகவரி தவறியதோ? மறதி மேலிட்டதோ?

வழக்கமான கூக்குரல்கள் இல்லை
கண்ணீர் பெருகும் முகங்கள் இல்லை
மருந்து வாசனை இல்லை! தாதிகள் இல்லை!
நோயாளிகள் எவரும் தென்படவில்லை

திடீரென மணி ஒலித்தது
அணையை திறந்த பின் பாயும் வெள்ளம் போல்
பாய்ந்தோடி வந்த சிறார்கள்
சிறகடிக்கும் வண்ணத்து பூச்சிகள்

சந்தேகமே இல்லை! முகவரி தவறிவிட்டது
மூளை கலங்கிவிட்டது! மறதி கூடி விட்டது
அங்கிருந்த காவலாளியிடம்அளாவளாவினார் கடவுள்
உண்மைதான் மருத்துவமனை பள்ளியாக மாறிவிட்டது



அறிவியல் செய்த ஆச்சரியம்
ஒரு தொழுநோயாளி கூட இல்லை
ஒரு எலும்புருக்கி கூட இல்லை
குணமாகி விட்டது! நோய் ஒழிந்து விட்டது

கடவுளுக்கு ஆச்சரியம்
நமக்கு தெரியாத இரசவாதம்
நாம் காலடியில் சுபிட்ச தேசம்
அறிவியல் வகுப்பில் ஓரமாய் நின்று கவனித்தார்

அறிவியலின் சாதனை! ஆராய்ச்சியின் கொடை
மனித முயற்சியில் கடவுள் சேவை
அறிவினால் ஆகுவதுண்டோ?
பிறிதின் நோய் தந்நோய் போல் போற்றாக் கடை

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# நிலையில்லா நிமிடங்கள்



மாற்றத்தின் கால்களின்
சக்கர சுழற்சியாய்
நம் எண்ணங்கள் - அதில்
சில ஊக்கம்
பலம் கொடுக்கும்
சில தாக்கம்
மனம் உடைக்கும்
சில ஏக்கம்
நிகழ் கசக்கும்
சில ஆக்கம்
மனம் ஆறுமன்றோ
எதுவும் கடக்கும்
இதுவும் நடக்கும்
என்றோ ஓர் நாள் - எண்ணியே
ஆசை படகில்
மெல்ல நகர்கிறேன்
துடுப்பில்லாமல் பிடிப்பில்லாமல்
கரை தேடி
அக்கரை நாடி!

கவிஞர் கி.விஜய், நெல்லிக்குப்பம்

# விழிக்கொடை அளித்திடுவோம்!

கண்களின் வழியேதான் காண்கின்றோம் உலகினையே!
மனித உறுப்புகளில் மகத்துவம் வாய்ந்தது கண்கள்!
கல்வியை, இல்லாளை, பிள்ளைகளை, கணவனை
நற்றமிழில் கண்ணேயென நாமழைப்போம் சிறப்பளித்து!
பிறவியில் விழியிழந்தோர், பார்வைக் குறைபாட்டால்
பாதிக்கப் பட்டோர்கள், விபத்தினால் பார்வையில்
பாதிப் படைந்தோர்கள் பலனடைய உறுதுணையாம்
விழிக்கொடை! ஒருவிழியால் நால்வர் பலனடைய
விழிக்கொடை! வாழ்கின்ற போதேநாம் வழங்கிடலாம்
விழிக்கொடையை!மருத்துவ உலகத்தின் மகத்தான
சாதனையால், பார்வையிழந்தோரைப் பலனடையச் செய்து
வேதனைகளைத் தீர்க்கும் விந்தைகள் இந்நாளில்!
கண்தானம் அளித்த கண்ணப்பர் கதையறிவோம்!
கண்மூடிப் போனவரை மண்ணுள் இடும்முன்னர்
கண்தானம் செய்தால் எண்ணற்றோர் பலனடைவர்!
இறந்த ஆறுமணி நேரத்திற்குள் விழிக்கொடையைப்
பெற்றிடுதல் வேண்டும்! இறந்தவரின் இமைகளைமூடி
இறந்தவரின் தலைப்பகுதி ஆறங்குல உயரத்தில்
இருந்திடும் வகைஉயர்த்தி, கண்ணிமை களின்மேலே
ஈரப்பஞ்சை வைத்திடல் அவசியமே! ஒருவயது
நிறைவுற்ற குழந்தைமுதல் யாவரும் தந்திடலாம்
கண்தானம்! மஞ்சள்காமாலை, பால்வினை நோய்கள்,
வெறிநாய்க் கிருமி நோய்கள், புற்றுநோய்.
கருவிழி பாதிப்பு உள்ளவர்கள் நீங்கலாக
யாரும் அளித்திடலாம் தங்களின் விழிக்கொடையை!
விழிப்புணர்வுடனே விழிக்கொடை அளித்திடுவோம்!
விழிக்கொடையால் பலர்வாழ்வில் ஒளிபிறக்க வழிசெய்வோம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரீ


# பாடம்

வெப்பம் சுமந்தாலும்
நிழல் தருகிறது
மரம்

கீறல் பட்டாலும்
பலன் கொடுக்கிறது
நிலம்

உடைத்தெரிந்தாலும்
மணம் தருகிறது
சந்தனம்

உடைந்து நின்றாலும்
ஒளி தருகிறது
சந்திரன்



வலியாயினும் ஒளியாகிட
பாடம் சொல்கிறது
இயற்கை.

துன்பமாயினும்
இனிப்பாய் இயங்கட்டுமே
நம் வாழ்க்கை

கவிஞர் அ. சேவியர், கடலூர்

# வானவில்

## இணைக்குறள் ஆசிரியப்பா

வண்ணத் தூரிகை வனமிகு அழகாம்
எண்ண சாயலின் எழிலாம்
வான மேக வார்ப்பாம்
கோனல் ஏட்டினின் குமரியாம்
கலைமகள் உருவென
மலைமகள் வடிவென
சிலையாய் தோன்றிய
அலைகடல் சிதறலின் அதிசயம்.
மழைவரும் பொழுதினில்
அழைப்பாய் வந்தாய்
மாலை சூடி மாண்டாய்
வேலை பாட்டில் வென்றாய்
விண்ணில் தோன்றும் வெட்சி;
மண்ணில் பார்க்கும் மாயை;
கண்கள் கண்டிடும் கனவாய்
பெண்மை ஈர்த்திடும் பெருமடல்
இயற்கை அன்னையால்
முயன்ற முட்புதர் முகில்களாம்
செயற்கையும் வெறித்திடும்
வியர்வையின் மதில்களாம்
புவியியல் வரைந்த பூவிதழ்
கவிதையால் எழுதிடும் கவியிதழ்
பதுமை ஓவிய படைப்பினில்
முதுமை இல்லா முக்கதிர் அழகியே.



கவிஞர் ஈ. தேவணிதன், பல்லடம்

# தண்ணீர்



நீரின்றி அமையாது உலகெனின் யார் யாருக்கும்
என்று அமையாது ஒழுக்கு.
நில உலகில் வாழும் எத்தகையோருக்கும்
வாழ்க்கை நீரின்றி அமையாது.
ஒழுக்கமும் மழையின்றி உலகத்தில் நிலைபெறாது.
இரண்டாம் அதிகாரத்திலேயே வள்ளுவப் பெருந்தகை
நமக்கெல்லாம் அறிவுறுத்துகிறார்.
எக்காலத்திலும் நமக்கெல்லாம் நீர் தேவையே!
நம் இந்திய நாடு மூன்று பக்க கடலும் ஒரு பங்கு மட்டுமே
நிலப்பரப்பு கொண்ட தீபகற்ப நாடாயிற்றே!
தண்ணீர் உயிர் வாழ, இயற்கை ஒளிர,
விவசாயம் தழைக்க தேவையே!
அதிக மழையும் பெய்து ஏரி, ஆறு, குளம், கிணறு நிரம்பி
பெருவெள்ளமாக பாய்ந்து உயிர்களை பயிர்களை சேதப்படுத்துமே
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு தானே!
வேதாத்திரி மகரிஷி அவர்கள் மழையை எல்லாம்
நிரம்பி வழியட்டும் என்றும்,
அளவோடு பெய்யட்டும் என்று இயற்கையை வேண்டுகிறார்.
நிலம் எக்காலத்திலும் வறண்டு போகாமல் தழைக்க
மழையை வாழ்த்துவோமாக!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

பொய்யான முத்திரையை மறைக்கும் முகமூடி
மிரள வைத்து சுகம் காணும்
மெய்யான முகங்கள்.



கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# மௌனக்கேடயம்

பிறரின்
கத்தல்களை
ஆத்திரங்களை
ஆக்ரோசங்களை
இயலாமையை
போட்டியை
பொறாமையை
கடுஞ்சொற்களை
அதிகாரங்களை
நிராகரிப்பு களை
உள்வாங்கிச் செல்கிறேன்
மௌனம் எனும்
கேடயத்தால்



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# தன்முனைக் கவிதைகள்



வெளிச்சத்தை விட
இருளையே விரும்புகிறேன்
எனக்கான போதங்கள்
அதனின் வரங்களே

இரவுகள் ஒளிரும்
பகல்கள் இருளும்
காலத்தின் கோலத்தில்
கிறுக்கல்கள் தாராளம்

எதுவும் வேண்டாம்
புன்னகை போதும்
யானைக்கும் பாகனாகலாம்
பகைவரையும் நட்பாக்கலாம்

அதர்க்க வெளியில்
அரண்டு இருள்கிறேன்
வெளிச்சம் தேடுகையிலும்
விதியின் விளையாட்டுகள்

வார்த்தை சூடுகள்
வெறுப்பு பிழம்புகள்
அந்த மூன்று நாட்கள்
ஆண்களுக்கும் தீ மிதித்தலே

புதிய முகங்கள்
பழைய நட்பு
கால ஓட்டத்தில்
கரையா நேசம்

கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

## பா வகை: கழிநெடிலடி ஆசிரிய மண்டிலம்



உயர்வெய்த படியாகும் பண்பேதான் வாழ்வில்
　　உயிருக்கும் மேலாக போற்றவேண்டும் மனத்தில்
கயமைகளை முறிக்கின்ற கண்துஞ்சா பொறுப்பு
　　கடமையாகி காத்தருளும் புவிமீதில் பண்பு
வியக்கின்ற வகை தன்னில் விரிந்திட்டால் பண்பு
　　விடியலையும் புகுத்திடுமே இருள்மந்தை வென்று
செயல்களிலே பண்பதுவும் சிறப்பாக மிளிர
　　செதுக்கிடலாம் புதுவுலகை சீர்தூக்கித் தானே

**இலக்கணக் குறிப்பு:**
(ஒவ்வோரடியிலும் எட்டு சீர்கள் / நான்கடிகள் / . நான்கு சீர்கள் அரையடியாகவும், அடுத்த நான்கு சீர்கள் அரையடியாக கீழே உள்ளே தள்ளி மடக்கி / மோனை முதல் சீருக்கும் ஐந்தாம் சீருக்கும் / நான்கடிக்கோர் எதுகை வரும். / முதல்அரையடியில் காய்+காய்+காய்+மா வந்து, அடுத்த அரையடியும் அவ்வாறே வரும்.

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# மன்னவனே



மாலையிட்ட தென்னவனே என்னுடைய மன்னவனே
கருசகாட்டு மச்சானே உசுர சுருட்டி வச்சவனே
என் பொறப்பே உனக்காகன்னு புரிஞ்சுதா
என் பார்வையில்கூட பாசம் குறைஞ்சுதா

மனசுல குழிதோண்டி விதைச்ச பாசம்
மஞ்சகயிறு தந்து காத்தது உன் நேசம்
நாம இரவெல்லாம் கதைபேசி மாமாங்கமாச்சி
காலையும் மாலையும் கைபேசி என்றாச்சி

கரம்பிடிச்சா போதுமுன்னு கண்ணீர்விட்ட மச்சான்
காதலியே மனைவியானதும் காதல் கானல் நீரா போச்சி
நித்தம் பேச ஆயிரம் கதை இருக்கு
என்னோடு பேச உனக்கு நேரம் எங்கயிருக்கு

அலுவலக பணி ஆயிரம் இருக்கும்
அடுத்தவருக்கு உதவிட அவசரம் இருக்கும்
உனக்காக நான் இருப்பது மறந்தே போயிருக்கும்
ஆசையோடு சமைச்ச சோறு ஆறி போகுது
அத்தானே உன் வரவுக்காக மனசு தவிக்குது

ஆயிரம் வருசம் ஒன்னா வாழ ஆச
வாழும் நாளெல்லாம் மனசு ஏங்குது பேச
ஒனக்காக துடிக்கிற உன் இதயம் நான்
நான் மட்டும் அடங்கிட்டா நின்னுடுமே உன் மூச்சிதான்

நின்னு கொஞ்சம் திரும்பி பாரு
பருவ வயது கடந்தாலும் பாசமனசு கரைவதில்லை
அழகெல்லாம் அழிஞ்சாலும் அன்பு வத்தி போகவில்ல

ஆயிரம்தான் உறவிருந்தாலும் உன்னபுரிஞ்சவ நாதானே
செத்த பிறகு அழுதாலும் வரமாட்டேன் பார்த்துக்கோ
இருக்கும் போதே சீராட்ட இப்போதே பழகிக்க
தாலிக் கட்டினா முடிஞ்சதுன்னு நினைக்கிறத மாத்திக்க

தாரம்தான் கடைசிவரை துணையா வருவா தெரிஞ்சிக்கோ
பிரச்சினைய முடிச்சி வச்சி பிணக்க தீர்த்துக்க

கவிஞர் பி.ரோஜாராணி, தேனி

இடம் : சகாயநாதன் வீடு

(எமல்டா, ரோட்ரிக்ஸ் உள்ளே வர சகாய நாதன் வரவேற்கிறார் உள்ளேயிருந்து எழிலரசி வருகிறார்.)

**சகாய நாதன் :** வாங்க ரோட்ரிக்ஸ்...வாங்க எமல்டா. எப்படி இருக்கீங்க? அப்புறம்...இப்போது எப்படி இருக்கிறார்? குடிப்பழக்கமெல்லாம் விட்டாச்சா?

**எமல்டா :** எங்கே நிறுத்துகிறார்? சொல்லிச் சொல்லி சலிச்சுப் போச்சு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒருமுறை வீட்டிற்குள் விழுந்து விட்டார். பேச்சு மூச்சில்லாமல். அப்புறம் இனி குடிக்கவே கூடாதென்ற பிறகு தான் நிறுத்த முயற்சிக்கிறார்.

**எழிலரசி :** (உள்ளே இருந்து வந்தவாறு) ஹலோ வாங்க வாங்க

**சகாய நாதன் :** குடிக்க தண்ணீர் கொடு, அவர்கள் சாப்பிடுவதற்கு ஏற்பாடு செய்.

**எமல்டா:** இப்போது சாப்பாடெல்லாம் வேண்டாம்.

**சகாய நாதன் :** இவ்வளவு தூரம் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள் சாப்பிடாமல் போனால் எப்படி?

**ரோட்ரிக்ஸ்:** இல்லை சகாய நாதன். நாங்கள் உங்கள் வீட்டிற்கு பலமுறை வர வேண்டுமென்று நினைத்து வரமுடியவில்லை. நல்ல வேளையாக இன்று வந்து விட்டுப் போக முடிந்தது. உணவெல்லாம் வேண்டாமே! தண்ணீர் கொடுங்கள் போதும்.

**சகாய நாதன் :** அதெல்லாம் ஒன்றுமில்லை. இருந்து சாப்பிட்டு விட்டுப் போங்கள்.

**எழிலரசி :** இதோ பாருங்க! கொஞ்சம் வந்து விட்டுப் போங்களேன்.

**சகாய நாதன் :** (உள்ளே போய்) என்ன விஷயம்?

**எழிலரசி :** நமக்குச் சமைப்பதற்கே அரிசி இல்லை. அவர்களைச் சாப்பிடச்

திரு இரஜகை நிலவன்

நாடகம் காட்சி-2

**எழிலரசி :** நமக்குச் சமைப்பதற்கே அரிசி இல்லை. அவர்களைச் சாப்பிடச் சொல்லுகிறீர்கள். எப்படி முடியும்.

**சகாய நாதன் :** நான் போய் வாங்கி வருகிறேன்.

**எழிலரசி :** ஏற்கனவே அளவிற்திகமான கடன். நீங்கள் வேலையில்லாமல் இருக்கிறீர்கள் என்று கடைக்காரனுக்கு தெரிந்து விட்டது. அவனும் இனி கடன் கொடுக்க மாட்டான்.

**சகாய நாதன்:** பக்கத்து வீட்டு ஏக்நாத் வீட்டில் கேட்டுப் பாரேன்.

**எழிலரசி :** சும்மாவே நம்மைப் பற்றி ஏளனமாக பேசுகிறவர்கள். நான் கேட்கமாட்டேன்.

**சகாய நாதன்:** வந்திருக்கிறவர்களுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டாமா? நான் வேண்டுமானால் கேட்டுப் பார்க்கிறேன்.

(உள்ளே தென் மலர், சில்வியா, மெர்லின் மூவரும் வருகின்றார்கள்)

**எமல்டா :** வாங்க மெர்லின். ஹலோ சில்வியா சுகமாக இருக்கிறீர்களா? ஹாய் தேன்மலர் இப்போது உங்கள் வீட்டுக்காரருக்கு உடல் நலம் எப்படி இருக்கிறது.

**தேன்மலர் :** இப்போது அபாயக் கட்டத்தை தாண்டி விட்டார்கள். இன்னும் ஆஸ்பத்திரியில் தான் இருக்கிறார்கள்.

**ரோட்ரிக்ஸ் :** ஏன், என்னாச்சி?

**எமல்டா :** உங்களை மாதிரி தான், இந்த ஆம்பளைங்களை குடிக்காதீர்கள் என்று சொன்னால் கேட்டால் தானே!

**சில்வியா :** ஆமாம்! எழிலரசி எங்கே காணோம்.

(சகாய நாதனும் எழிலரசியும் உள்ளே வர)

**எழிலரசி :** வாங்க சில்வியா, ஏயப்பா தேன்மலர், மெர்லின் எல்லோரும் வந்திருக்கிறார்களே என்ன விஷயம்!

**மெர்லின் :** நம்முடைய சபை திருவிழாவிற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதுதான் எழிலரசி கிட்ட சொல்லி விட்டு போகலாம்னு வந்தோம்.

**சகாய நாதன் :** எழில் வந்தவர்களுக்கெல்லாம் காபி கொடு. அவர்களுக்கு சாப்பிட சாப்பாடு ஏற்பாடு செய்.

திரு இரஜகை நிலவன்

நாடகம்

காட்சி-2

**தேன்மலர் :** சாப்பாடெல்லாம் வேண்டாங்க கொஞ்சம் தண்ணீர் மட்டும் கொடுங்கள்.

**சகாய நாதன் :** எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள் சாப்பிடாமல் போனால் எப்படி? உணவருந்தி விட்டுச் செல்ல வேண்டும்.

**எழிலரசி :** (தனியாக) சும்மா வந்திருக்கிறவர்களையெல்லாம் சாப்பிட சொல்கிறீர்கள். நம்மிடம் தேவையான உணவுப் பொருள்கள் இருந்தாலாவது பரவாயில்லை.

**சகாய நாதன் :** நம்மை பார்ப்பதற்கு வந்திருக்கிறவர்களை பசியோடு அனுப்பலாமா? நான் பக்கத்து வீட்டு ஏக்நாத்திடம் தேவையான அரிசியை வாங்கி வருகிறேன் நீ சமையலுக்கு தயார் செய்.


**எழிலரசி :** உங்கள் விருப்பம்.



திரு இரீஜகை நிலவன்

## நூல் அனுபவம்

## கவிதைகளின் கவித்தோப்பு




"கவிமாமணி" இரஜகை நிலவன்

கற்பனைகளைக் கட்டிக்
கடலில் தாழ்த்திடு.
உள்ளத்தைக் கொள்ளை கொண்டாய்
உள்ளளவும் காவியத் தலைவியாக.

உண்மையின் நிகழ்வுகளை
உரைக்காதே யாரிடமும்
வாழ்க்கை ஏட்டில்
வானமும் வசப்பட

எண்ணத் துளிகளை
கவியாய் படைத்திட
பலவண்ணக் கவிதனை
சுற்றி விதைத்திட

கானக் குயில்களின்
ராகமாய் ஒளித்திட
வாசமிகு கவிமலர்கள்
பூத்துக் குலுங்கிட

நேசமிகு கவிச்
சொந்தங்கள் மகிழ்ந்திட
வளமிகு கவிக்குழுமம்
மேலும் வளர்ந்திட

வாழ்ந்திட மனமுவந்தே
இனிமை நிறைந்திட
கவி நிறைந்த
தளமாய் மாறிட

நேரம் ஒதுக்கி
கவிச்சரம் தொடுத்திட
இன்னல்கள் மறந்து
இன்பமே பொழிந்திட

ஒளியுடன் வரைந்து
கவி மிளிர்ந்திட
தமிழ் இனிதாய்
எங்கும் பதித்திட

பெருமை நிறைந்த
தமிழ் தவழ்ந்திட
கவி வடித்த
கவியமுதே வருக வருக.

இறைவன் படைப்பின்
இதமான வித்தைகளை.
காற்றின் இடைவெளி
காலமாற்றத்தை விதைத்திட

உயிருக்குள் உருகுதே
உன் நினைவுகள்.
உள்ளத்தைக் கொள்ளை கொண்டாய்
உள்ளளவும் காவியத் தலைவியாக.

உண்மையின் நிகழ்வுகளை
உரைக்காதே யாரிடமும் -என்றே
வித்தியாசமான
கவிதைகளின் வித்தியாசமான தொகுப்பு.

**திரு கவிஞர் ஷரீநவாஸ்**

# குட்ட நாட்டரசன் குட்டுவன்

## நூல் அனுபவம்

ஜெயப்பிரகாஷ் திருவெண்ணெய்நல்லூரை சேர்ந்தவர் , வாசிப்பாளர், எழுத்தாளர் என பன்முகம் கொண்டவர்.
இவரது இயற்பெயர் ஜெயப்பிரகாஷ் என்றாலும் தமிழ் மீது தான் கொண்ட பற்றால் பரிதி என்று பெயர் மாற்றி கொண்டவர்.
கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளலின் ஊர்க்காரர் நடுநாட்டுக்காரர்.
எனக்கு இந்த தலைப்பை பார்த்தவுடன்

"தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண் பூழி
பன்றி அருவாள் அதன் வடக்கு - நன்றாய
சீத மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதம் இல் சீர் பன்னிரு நாட்டு எண்".

இந்த வெண்பா என் நினைவில் நிறைகிறது. இந்த நூலின் ஆரம்பத்தில் தமிழ் தாய் வாழ்த்தும்,தனது அம்மாவுக்கு இந்த நூலை கௌரா பதிப்பகம் சமர்ப்பித்துள்ளார்கள். இதற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.




இந்த நூல் முழுக்க முழுக்க பொருளடக்கமே இல்லாமல் பயணித்து இருப்பது வாசகனுக்கு மேலும் சுவராஸ்யத்தை கூட்டுகிறது. இந்த நூல் முழுக்க நெடுஞ்சேரலாதனின் தம்பி பல்யானை செல் கெழுகுட்டுவன் பற்றி விரிவாக விவரிக்கின்றது.
இந்த நாவல் முழுக்க முழுக்க பரபரபரப்புக்கும் சுவராஸ்யத்திற்கும் பஞ்சம் இருக்காது பல பல நிகழ்வுகள் பற்பல தகவல்கள், பலபல சம்பவங்களை இந்த நூலில் குவித்து கிடக்கிறது.
காதல், நட்பு, அரசியல், சோகம், நயவஞ்சகம் ,வீரம், படைபலம், வெற்றி, கருணை, கொடை, நாட்டு மக்களின் நிலை, நாட்டின் செல்வ நிலை என அத்தனை பக்கங்களிலும் ஒரு ரவுண்டு வந்திருக்கிறார் ஆசிரியர். பல இடங்களில் சங்க இலக்கிய பாடல்களை மேற்கோள் காட்டி இருக்கிறார் அதுமட்டுமல்லாமல் இசை வாத்தியங்கள் குறித்த தகவல்களை எழுதியுள்ளார் எழுத்தாளர் திருவெண்ணெய்நல்லூர் பரிதி(எ) ஜெயப்பிரகாஷ் .

குட்ட நாட்டரசனின் இயற்பெயர் தெரியவில்லை ஆதலால் இந்த புதினத்திற்காக இந்த பெயர் சூட்டப்பட்டது எனும் இவரது நேர்மை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இந்த நூல் இவரது முதல் நூல் ஆனால் இவரது அனுபவம், உழைப்பும் இந்த நூல் முழுக்க முழுக்க வெளிப்பட்டிருக்கிறது
பல இடங்களில் வியப்பினை தருகிறார் இவரின் உழைப்பு இந்த இந்த நூலில் பட்டவர்த்தனமாக தெரிகிறது.

திரு தினேஷ்கண்ணா, வழுதாவூர் (விழுப்புரம் மாவட்டம்)

# குட்ட நாட்டரசன் குட்டுவன்

## நூல் அனுபவம்

ஒரு இடத்தில் ஒரு இடத்தினை குறிப்பிட்டு விட்டு அந்த இடம் இப்போது எப்படி இருக்கிறது என்பதை விவரித்துள்ளார் ஆசிரியர்.
அது ரொம்ப முக்கியம் என்று நினைக்கிறேன்.

இந்த நூல் முழுக்க நீங்கள் படிக்கும் போது சர்வ நிச்சயமாக உங்களின் வாசிப்பு சங்க இலக்கியங்கள் நோக்கி திரும்பும் என்று சர்வ நிச்சயமாக கூற முடியும் குட்ட நாட்டரசன் குட்டுவன்

நம்மை கசங்க இலக்கியங்கள் பக்கம் திருப்புவார் என்பதில் ஐயமில்லை.
குட்ட நாட்டு குட்டரசன் மேலும் வெற்றிகளை குவிக்கட்டும்!

மனம் நிறைந்த பாராட்டுக்கள் எழுத்தாளரே! தொடர்ந்து எழுதுங்கள்! நாம் வாசிப்பை நேசிப்போம்! தொடர்ந்து பயணிப்போம்!




திரு தினேஷ்கண்ணா, வழுதாவூர் (விழுப்புரம் மாவட்டம்)

# எஸ்.பரசுராமய்யர்

## கட்டுரை

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்



தமிழில் குழந்தை இலக்கிய வரலாற்றை எழுதும்போது இவரைப் பற்றி எழுதவில்லை என்றால் வரலாறு முழுமை அடையாமல் போய்விடும். இவர் படைப்பாளி அல்ல. ஆனால் படைப்பாளர்களின் படைப்புகளுக்கு உருவம் கொடுத்தவர். ஆம் அவர்தான் திரு.எஸ்.பரசுராமய்யர். இவர் புதுக்கோட்டையில் கண்ணபிரான் என்ற அச்சகத்தை நடத்தி வந்தவர்.

மாயவரத்திற்கு அருகில் அமைந்த ஆறுபாதி என்ற சிறிய கிராமத்தில் 1905ஆம் ஆண்டில் பிறந்தவர். மாயவரம் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் குடும்ப சூழ்நிலை காரணமாக படிப்பை இடையில் கைவிட வேண்டியதாயிற்று. பின்னர் ஓர் அச்சகத்தில் பணியில் சேர்ந்து அச்சகப் பணி நுணுக்கங்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார்.

காந்தியவாதியான திரு.பரசுராம் எப்போதும் கதராடைகளையே உடுத்தி வந்தார். சுதந்திரப் போராட்ட காலத்தில் புதுக்கோட்டையிலிருந்து "தேசபந்து" என்ற இதழ் வெளியாகிக் கொண்டிருந்தது. அந்தப் பத்திரிகையின் அச்சகத்தில் பணியாற்றி புதுக்கோட்டைக்கு வந்தார். பின்னர் நாளடைவில் 1942ஆம் ஆண்டில் புதுக்கோட்டை இராஜவீதியில் அமைந்த கண்ணபிரான் அச்சகத்தைத் தாமே ஏற்று நடத்தத் தொடங்கினார். அன்றைய காலத்தில் புதுக்கோட்டையில் இருந்து ஏராளமான பத்திரிகைகள் வெளியாகிக் கொண்டிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை கண்ணபிரான் அச்சகத்திலேயே அச்சடிக்கப்பட்டன.

கண்ணபிரான் அச்சகம் சாதாரண அச்சகமல்ல. அது அக்காலத் தமிழ் எழுத்தாளர்களின் கலைக்கூடமாக அனைவரும் சந்திக்கும் இடமாக மெல்ல மெல்ல மாறியது. அக்காலப் பத்திரிகை ஆசிரியர்கள் பலர் அச்சகத்தில் கூடிப் பேசி கருத்துக்களை பரிமாறிக் கொள்ளுவார்கள்.

திரு அ வில்சன், இதழாசிரியர்

# எஸ்.பரசுராமய்யர்

## கட்டுரை

பறவைகள் கூடுமிடம் வேடந்தாங்கல் என்பது போல அன்றைய புதுக்கோட்டை எழுத்தாளர்கள் கூடுமிடம் கண்ணபிரான் அச்சகமாக இருந்தது. கண்ணபிரான் அச்சகத்தில் எழுத்தாளர் அகிலன், திரைப்பட இயக்குநர் ப.நீலகண்டன், பாடலாசிரியர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி போன்றோர் அடிக்கடி சந்தித்து இலக்கியம் பேசுவது வழக்கமான ஒன்றாக இருந்தது.



புதுக்கோட்டைக்கு அருகில் அமைந்த இராயவரத்திற்கும் குழந்தை இலக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குழந்தைக்கவிஞர் அழ.வள்ளியப்பா, "அணில்" குழந்தைகள் இதழை நடத்திய சக்தி.வை.கோவிந்தன், "பாப்பா" குழந்தைகள் இதழினை நடத்திய இராம.தியாகராஜன், தமிழ்நிலைய அதிபர் வெ.சுப.நடேசன், "பாப்பா மலர்" முத்து நாராயணன், பழனியப்பா பிரதர்ஸ் அதிபர் செ.மெ.பழனியப்பா என பல சான்றோர்கள் பிறந்த ஊர் இராயவரம். குழந்தை இலக்கியத்தில் "பாலர் மலர்" மிக முக்கியமான குழந்தைகள் இதழாகும். இதை தமிழ் நிலைய அதிபர் வெ.சுப.நடேசன் அவர்கள் மாதமிருமுறை இதழாக நடத்தினார். மேலும் இவர் "டமாரம்" குழந்தைகள் வார இதழ் "சங்கு" வாரம் இரு முறை இதழ் என பல குழந்தைகளுக்கான இதழ்களை வெற்றிகரமாக நடத்தினார்.

புதுக்கோட்டையிலிருந்து அக்காலத்தில் ஏராளமான குழந்தை இதழ்கள் வெளியாகின. "பாலர்மலர்", "டமாரம்", "சங்கு" என பலப்பல குழந்தைகள் இதழ்கள் கண்ணபிரான் அச்சகத்தில் தயாராகின. ஒரு கட்டத்தில் பல காரணங்களினால் இத்தகைய குழந்தைகளின் இதழ்கள் நிறுத்தப்பட்டு விட்டன. அக்காலக் குழந்தைகள் தங்களுக்கான இதழ்கள் நின்று போய்விட்ட காரணத்தினால் பெரிதும் வருந்தினார்கள். திரு.பரசுராமய்யர். குழந்தைகள் அடைந்த வருத்தம் அவர் மனதை என்னமோ செய்தது. எனவே அவர் குழந்தைகளுக்காக ஓர் இதழைத் தொடங்குவது என்று முடிவு செய்தார். உடனே அந்த இதழுக்கு "டிங்டாங்" என்று பெயரையும் சூட்டினார்.

திரு அ வில்சன், இதழாசிரியர்

# எஸ்.பரசுராமய்யர்

## கட்டுரை

எட்டு பக்கங்களில் இரு வண்ணங்களில் அமைந்த "டிங்டாங்" இதழின் விலை அரையணா. குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் கீழ்க்காணும் பிரபல பாடல் முகப்புப் பாடலாக அமைக்கப் பட்டது.

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்



இதன் ஆசிரியர் பொறுப்பினை திரு.பரசுராமய்யர் அவர்களின் மகன் திரு.பி.வெங்கட்ராமன் அவர்கள் ஏற்றார். இதில் ஒரு விசேஷம் என்ன என்றால் அப்போது திரு.பி.வெங்கட்ராமன் அவர்களுடைய வயது வெறும் பதினேழுதான். அன்றைய சிறுவர்களிடையே இந்த "டிங்டாங்" இதழ் பெரும் வரவேற்பைப் பெற்றது. இவ்விதழில் மாயூரன், பூரம், ஜெ.எத்திராசன், தம்பி சீனிவாசன் என பலர் தங்கள் படைப்புகளை அளித்துச் சிறப்பித்துள்ளனர்.

தமிழில் குழந்தை இலக்கியம் இன்று சிறந்த வளர்ச்சிப் பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்றால் அந்த வெற்றியில் புதுக்கோட்டை பத்திரிகை அதிபர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் முக்கியப் பங்கு உண்டு. அந்த வகையில் கண்ணபிரான் அச்சக அதிபர் திரு.பரசுராமய்யரும் ஒரு முக்கிய காரணகர்த்தாவாகத் திகழ்கிறார். திரு.எஸ்.பரசுராமய்யர் அவர்கள் 1989ஆம் ஆண்டில் காலமானார்.

நன்றி
குழந்தை இலக்கிய முன்னோடிகள்,ஆர்.வி.பதி (மணிவாசகர் பதிப்பகம்)

திரு அ வில்சன், இதழாசிரியர்

அகர முதல இலக்கியப் பேரவை

தமிழ் வெல்க வெல்கவென்றே தினம் பாடு!

நாளை

# நமதே

## வார்த்தையால் பேசுவதைவிட

## வாழ்ந்து காட்டுவதே

## சிறப்பு



**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com